**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 20.08.2025**

**அசல் வழக்கு எண். 295/2012**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது சொந்த ஊர் வடக்கு மலையடிப்பட்டி என்றால் சரிதான். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையில் உள்ள விபரங்களை நான் கூறினேனா அல்லது எனது மனைவி கூறினாரா என்றால் எனது மனைவி கூறினார். இவ்வழக்கை யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் கணேசன் என்பவர் என் மீது தாக்கல் செய்துள்ளார். நான் எதிர்கோரிக்கையை கணேசன் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த பவர் ஏஜெண்டான மூவேந்திரன் என்பவர் வடக்குமலையடிப்பட்டி கிராமத்தை சேர்ந்தவரா என்றால் அவர் சிவகாசிக்கு பக்கத்தில் உள்ள ஒரு ஊரை சேர்ந்தவர். மேற்படி மூவேந்திரன் எனது உறவினர் இல்லை என்றாலும், அவர் வேறு சமுதாயத்தை சார்ந்தவர் என்றாலும் சரிதான்.

2. நான் முதலில் எந்த காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன் என்றால் கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். எந்த வருடம் புகார் மனு கொடுத்தேன் என்றால் 2009 ம் வருடம் புகார் மனு கொடுத்தேன். மேற்படி புகார் மனுவிற்கு நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. நீதிமன்றத்திற்கு செல்லுமாறு கூறிவிட்டனர். எனது எதிர்கோரிக்கையில் மேற்படி புகார் மனு அளித்ததன்பேரில் கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் விசாரணை செய்து மூவேந்திரன் மற்றும் ஆறுமுகம் ஆகியோரது கையெழுத்தை பெற்று அதை கைரேசை நிபுனருக்கு அனுப்பியதாக கூறப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. பொதுவாக ஒரு சொத்தை கிரையம் பெற்ற நபர் அவர் கிரையம் பெற்ற சொத்தை வேறு ஒருவருக்கு பரிமாற்றம்செய்வதோ அல்லது அவரே அதை பயன்படுத்தி வருவதோ அவரது விருப்பப்படி செய்துகொள்ளலாம் என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்னர் கிரையம் பெற்ற சொத்திற்கான வில்லங்கசான்றிதழை

பார்த்தேனா என்றால் நான் கிரையம் பெற்ற பிறகு அந்த சொத்திற்கான வில்லங்கசான்றிதழை பார்த்தேன்.

4. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் நான் கிரையத் தொகையான ரூ.13,50,000 யை ஒரே தவணையில் மூவேந்திரனிடம் செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3 தவணைகளாக கொடுத்தேன். நான் மூவேந்திரனுடன் கிரைய ஒப்பந்தம் ஏதும் ஏற்படுத்திக் கொண்டேனா என்றால் கிரையத் தொகையை 3 தவணைகளாக நான் கட்டுவதற்காக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம். மேற்படி ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 3 தவணைகளாக செலுத்திய கிரையத்தொகைக்கு ஒவ்வொரு தவணையின்போது பணப்பற்று ரசீது பெற்றேனா என்றால் அவ்வாறு எந்த ரசீதும் நான் பெறவில்லை.

5. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 ஆவணம் நான் மூவேந்திரனிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிரையத்தொகை மற்றும் பணப்பற்று விபரம் சரியானதா அல்லது எனது எதிர்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கிரையத்தொகை மற்றும் பணப்பற்று விபரம் சரியானதா என்றால் எதிர்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானது. கிரையத்தொகையை நான் செலுத்திய தவணைகள் பற்றிய விபரம் நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார், எனது எதிர்கோரிக்கை மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆவணம் ஆகியவற்றில் முன்னுக்குபின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

6. வழக்கு தபசில் சொத்துக்கள் ஆதியில் எங்கள் ஊரை சேர்ந்த ராஜாமணி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ராஜாமணி என்பவர் இறந்தபிறகு அவரது வாரிசுகள் வழக்கு தபசில் சொத்துக்கள் பொறுத்து மூவேந்திரன் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக்கொடுத்தனர் என்றால் சரிதான். வழக்கு தபசில் சொத்துக்கள் ராஜாமணி கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் வழக்கு தபசில் சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்களையும் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு வழக்கு தபசில் சொத்துக்களை மூவேந்திரன் ஆறுமுகம் என்பவருக்கு கிரையம்

கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. மூவேந்திரன் வழகக்கு தபசில் சொத்துக்களை ஆறுமுகத்திற்கு விற்பனை செய்த விபரம் நான் வில்லங்கசான்றிதழ் பார்த்தபிறகுதான் எனக்கு தெரியும். இவ்வழக்கின் வாதி தபசில் சொத்துக்களை கிரையம் பெற்ற 6 மாதங்களுக்கு பிறகு நான் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. மூவேந்திரன் ஆறுமுகத்திற்கு பிறப்பித்துக்கொடுத்த கிரைய ஆவணத்தில் மூவேந்திரன் மற்றும் ஆறுமுகம் ஆகியோரது கையெழுத்துக்களை ஒப்பீடு செய்து சரிபார்ப்பதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டு அதற்கான அறிக்கை பெறப்பட்டு அந்த அறிக்கை எனக்கு எதிராக இருப்பதால் அந்த அறிக்கையை நான் எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்ய கோரவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் வழக்கு தபசில் சொத்து உட்பட வேறு சொத்துக்களையும் நான் மூவேந்திரனிடமிருந்து கிரையம் பெற்றதால் அந்த கிரைய ஆவணத்தின் அசலை என்னிடம் கொடுத்துவிட்டார் என்றாலும், அதனால் மூவேந்திரனிடமிருந்து வழக்கு தபசில் சொத்தை மட்டும் கிரையம் பெற்ற ஆறுமுகத்திற்கு அசல் ஆவணம் கிடைக்கப்பெறவில்லை என்றாலும் சரியல்ல. மூவேந்திரனிடமிருந்து வாதி நேர்மையாகவும், உண்மையாகவும் கிரையம் பெற்றார் என்றாலும், வாதி கிரையம் பெற்ற சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வாதியின் வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றாலும், எனது எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**